**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 0 முதல் 6 வயது வரை உள்ள மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான 32 நடமாடும் சிகிச்சை பிரிவுகள்– திட்டத் தொடராணை மற்றும் ரூ.38,12,000/– தொடர் செலவினத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்தல்– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.75 நாள்:28–11–2014

ஜய, கார்த்திகை 12,

திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.70, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 17–07–2013.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதம் எண்.1825/இவாததி/2013, நாள் 02.05.2014.

–––––––

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 0–6 வயது வரை உள்ள மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் 32 மாவட்டங்களில், 2013–2014 ஆம் ஆண்டு முதல் தொடங்க அனுமதியும், மேலும், இத்திட்டத்திற்கென ரூ.4,49,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. 2014–2015 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை உரையின் போது, மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் பொதுப்பணித் துறை) அவர்களால் ஏனையவற்றுடன் பின்வருமாறு அறிவிப்பு ஒன்றும் செய்யப்பட்டது:-

“ஆறு வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்கு உடற்பயிற்சி சிகிச்சை வழங்குவதற்காக 4.49 கோடி ரூபாய் செலவில் 32 நடமாடும் சிகிச்சை மையங்களை அமைத்திட, இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்கள் 2014–2015 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.”

3. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், 0 முதல் 6 வயது வரை உள்ள மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள், 2014–15 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்திட அனுமதியும், இதற்கான தொடர் செலவினத் தொகையான ரூ.97,00,000/–ஐ ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த பின்னர், அரசு அதனை ஏற்று, 0–6 வயது வரை உள்ள மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளுக்கென 32 மாவட்டங்களில், 2014–2015 ஆம் நிதியாண்டில் நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் தொடர்ந்து செயல்பட ஏதுவாக, இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு ரூ.38,12,000/–(ரூபாய் முப்பதெட்டு இலட்சத்து பன்னிரெண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து

அரசு ஆணையிடுகிறது. மேலும், இச்செலவினத்தை மேற்கொள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

“2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்–பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–MV மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள்–

| | |
|---|---|
| 08– விளம்பரமும் பிரச்சாரமும் 01 விளம்பரக் கட்டணங்கள்<br>(2235 02 101 MV 0816) | ரூ.8,68,000/– |
| 45– பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய்<br>(2235 02 101 MV4509) | ரூ.12,80,000/– |
| 33– தொழில் முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 04 தொகுப்பூதியம் (ஊர்தி ஓட்டுநர் மற்றும் ஊர்தி உதவியாளர்)<br>(2235 02 101 MV 3340) | ரூ.16,64,000/– |
| மொத்தம் | ரூ.38,12,000/– |

6. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்றப்பட வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.65751/நிதி(சந)/2014, நாள் 26.11.2014ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

**நகல்:–**
நிதி (சந)த் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

<u>**இணைப்பு**</u>

(அரசாணை(நிலை) எண்.75, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 28–11–2014)

**தொடர் செலவினம்**

| | | |
|---|---|---|
| 1. | ஊர்தி ஓட்டுநருக்கான தொகுப்பூதியம் ரூ.8,000/– x 4 மாதங்கள் x 32 மாவட்டங்கள் (டிசம்பர் 2014 முதல்) | ரூ.10,24,000/– |
| 2. | ஊர்தி உதவியாளர்களுக்கான தொகுப்பூதியம் ரூ.5,000/– x 4மாதங்கள் x 32 மாவட்டங்கள் | ரூ.6,40,000/– |
| 3. | எரிபொருள் செலவினம் + பராமரிப்பு செலவினம் ரூ.10,000/– x 4 மாதங்கள் x 32 மாவட்டங்கள் | ரூ.12,80,000/– |
| 4. | விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு சாதனங்கள் செலவினம் ரூ.27,125/– வீதம் ஒரு மாவட்டத்திற்கு x 32 மாவட்டங்கள் | ரூ.8,68,000/– |
| | மொத்தம் | ரூ.38,12,000/– |

(ரூபாய் முப்பதெட்டு இலட்சத்து பன்னிரெண்டாயிரம் மட்டும்)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.